
# எங்கும் நிறைந்த எங்கள் திராவிடப் பேரரசர்!



தமிழக அரசியல் வானில் தேர்தல் பிறை தெரிந்து விட்டது.

அனைத்துக் கட்சிகளும் அவரவர் நிலைக்கேற்ப கூட்டணிகளை அமைத்து தொகுதிப் பங்கீட்டு, உடன்பாடு காண்கின்றன.

வெகுசில கட்சிகளில் காட்சிகள் மாறி, அத்தையா, மாமியா? அங்கேயா? இங்கேயா? என்று கரகாட்டம் அடிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் தேர்தல் களத்தில் எழுபதாண்டு உரம்மிகுந்த வீர வரலாறு மிக்க திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் வியூகங்களை திறம்பட நேர்த்தியுடன் வகுத்து வெற்றிக் கூட்டணி இதுதான் என மாற்றார் மருள, மற்றவர் மிரள புதியதொரு வடிவம் பெற்று நிற்கிறது.

திராவிடப் பேரரசர் தளபதியவர்களின் தலைமையிலான தேர்தல் பாசறை ஒருபுறம், தேர்தல் வாக்குறுதிகளை தயாரிக்க தெருவிற்கே சென்று மக்கள் கருத்துக்களை, தேவைகளை கேட்டறிந்து அறிக்கையில் சேர்க்கிறது.

தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட கூட்டணி தொகுதி பங்கீட்டுக் குழுவினர் தோழமைக் கட்சியினருடன் இன்முகம் காட்டி வரவேற்று, இயன்றதை, அவர்கள் விரும்பியதை சாதக, பாதக நிலைகளை சீர்தூக்கிப் பார்த்து, உடன்பாடு காண்கின்றனர்.

இன்னும் ஒரு நாற்பது தினங்களில் மீண்டும் தமிழ் நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ள நமது தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தேர்தல் களம் காணும் வீரர்களை தேர்வு செய்யும் பணியினை சென்ற 17 ந் தேதியிலிருந்தே துவக்கி, அண்ணா அறிவாலயத்தில் நடத்தி வருகிறார்.

வேட்பாளர் விருப்பமனுவை அறிவாலயத்தில் விநியோகித்த போதே, கட்டுக்கடங்காத கழகத்தோழர்கள் மனுக்களைப் பெறுவதையே ஒரு திருவிழாவைப்போல் ஆடிப்பாடி அமர்க்களப்படுத்திவிட்டனர்.

ஆண்களுக்கு சமமாக பெண்களும், இளைஞர்களும், வழக்கறிஞர்களும், மாணவர்களும் போட்டிப் போட்டுக் கொண்டு விருப்ப மனுக்களைப் பெற்றதால், குறித்த தேதியை தாண்டி, மேலும் ஒரு வாரம் விண்ணப்பம் விநியோகிக்கப்படும் என்று அறிவாலயம் அறிவித்தது.

**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
கழக கொள்கைப் பரப்பு
துணைச் செயலாளர்



கும்மிடிப்பூண்டி முதல் குமரிவரை ஆயிரக்கணக்கான தோழர்கள் அவர்தம் ஆதரவாளர்களோடு சென்னையில் அறைகளெடுத்து தங்கி, அண்ணாசாலை எங்கும் பறந்து, விரைவி காணுமிடமெல்லாம் கருப்பு சிவப்பு படைவீரர்களாகக் காட்சி தந்தனர்.

கழகத்தின் ஆரம்ப நிலையில் என். வி. நடராசன், முத்துசாமி, சத்தியவாணி முத்து போன்றோரைக் கொண்டு ஆட்சிமன்றக்குழு என்றதொரு அமைப்பினை ஏற்படுத்தி, அதை தமிழ் நாடெங்கும் அனுப்பி, எந்தெந்தப் பகுதியில் எவருக்கு செல்வாக்கு என களநிலவரம் அறிந்து, ஒரு பட்டியலை தயாரித்து அண்ணாவிடம் வழங்குவர். தேவையிருப்பின் ஒரு சில மாற்றங்களை செய்து, அண்ணா அவர்கள் வேட்பாளர் பட்டியலை வேட்பாளர் அறிவிப்பு மாநாடு என அறிவித்து வெளியிடுவார்.

அண்ணாவைத் தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்களின் காலத்திலும் 1980: தேர்தல்கள் வரை ஆட்சி மன்றக்குழுக்கள் அமைத்து, அவற்றின் பரிந்துரைகளைப் பெற்றே வேட்பாளர்களை அறிவித்தார்.

எனக்கே நினைவிருக்கிறது 1980 ல் எங்கள் பொன்னேரி தொகுதிக்கு ஆட்சிமன்றக்குழுக் கூட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம் கவரப்பேட்டையில் நடைபெற்றது. அந்த நாள் சட்டமன்ற உறுப்பினர்களான துரைமுருகன், இரகுமான்கான் இருவரும் வந்திருந்தனர். ஒரு ஆதரவு மனுவின் விலை ஐந்து ரூபாய். ஆயிரக்கணக்கான மனுக்கள் பெறப்பட்டு அதில் ஆதரவு அதிகமிருக்கும் நபரை தலைவருக்குப் பரிந்துரை செய்வார்கள்.

1984 க்கு பிறகு ஆட்சிமன்றக்குழுக்கள் இல்லாமல் கழக முக்கியஸ்தர்கள், ஒன்றிய, பகுதி செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் பரிந்துரைப் படி இறுதியாக தலைவர் கலைஞரும், பொதுச்செயலாளர் பேராசிரியரும் வேட்பாளர்களை தேர்வு செய்தனர். எப்போதும் போல பக்கத்தில் சாதிக்பாட்சா, நாஞ்சிலார், ஆற்காட்டார், துரைமுருகன், முரசொலிமாறன், தேர்தல் பணிக்குழு செயலாளர் இருப்பார்கள்.

வாய்ப்புக் கேட்டு வருவோரின் வாயைக்கிளறி, நாட்டு நடப்பை நாகரீகத்துடன் சில நேரங்களில் நையாண்டியுடன் தலைவர்கள் அறிந்து கொள்வர்.

வாய்ப்பு கேட்டு விண்ணப்பித்து, பணம் செலுத்திய தொண்டருக்கு சீட்டு இல்லாமல் போனாலும், தனது உயிரில், உணர்வில் ஊறித்திளைத்துவிட்ட தலைவர் கலைஞரை அருகே சென்று, ஐந்து, பத்து மணித்துளிகள் அவரிடம் பேசிய பெருமையை ஊர் திரும்பி, தெருவெங்கும், திண்ணைகளெங்கும், டீக்கடைகளெங்கும் பேசிப்பேசி களித்திடுவார்கள்.

வேட்பாளர் பட்டியலை இறுதிசெய்து தயாரித்த தலைவர் அதை வெளியிடும் மாநாடு அல்லது பொதுக் கூட்டத்தை அறிவிப்பார்.

1984 நாடாளுமன்ற - சட்டமன்ற வேட்பாளர்களை சென்னை ஷெனாய் நகர் புல்லாரெட்டி அவென்யூவில் பொதுக்கூட்டம் ஏற்படுத்தி அறிவித்தார்.

அந்தக் கூட்டத்திற்கு மேல்நிலைப்பள்ளி மாணவனான நானும், எனது தம்பியும் ( தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய முதன்மைப் பொறியாளர் ) கல்லூரி மாணவர்களான ஆரணிப் பேரூர் முன்னாள் செயலாளர்கள் ஜி. பி. வெங்கடேசன், டி. கண்ணதாசன் ஆகியோரும் சென்றிருந்தோம். அப்போதைய பேரூர் செயலாளர் கோ. குணசேகரன் சென்னைக்குச் செல்ல லாரி ஏற்பாடு செய்திருந்தார். பெரியவர்கள் தலைக்கு 4 ரூபாய். என்போன்ற சிறுவர்களுக்கு ரூ.2 என வசூலித்து, லாரியில் ஏற்றுவார்.

அன்று வேட்பாளர் அறிவிப்புக் கூட்டம். மாலையில் நடைபெற்றது. கட்டுக்கடங்காத பெருங்கூட்டம். எங்களால் மேடைக்கு முன்பகுதிக்குச் செல்ல முடியாமல் பின்பகுதியில் அமர்ந்து விட்டோம்.

சென்னை மாவட்ட அந்நாள் செயலாளர் அண்ணன் டி. ஆர். பாலு அவர்கள் பின்னாலும் பெருங்கூட்டம் இருப்பதைக் கண்டு, அப்போதுதான் நடைமுறைக்கு வந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை பின்பக்கம் அமைத்துக் கொடுத்தார்.

கழக முன்னணித் தலைவர்கள் பேசி, இறுதியாக வேட்பாளர்களை அறிவித்து பேசவந்த தலைவர் கலைஞர் அவர்கள் இரண்டு தகவல்களை குறிப்பிட்டுச் சொன்னது இன்னும் எனது நினைவில் பசுமையாக இருக்கிறது.

முதலாவதாக வேட்பாளர்கள் பெயரையும், தொகுதியையும் படித்துக்கொண்டே வந்த தலைவர், திருச்சி 1 ல் 1980 ல் ஒரேயொரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பினை இழந்த தம்பி மலர்மன்னன் என்றார் . கூட்டத்திடையே எழுந்த கையொலி விண்ணைப் பிளந்தது.

இறுதியாக பட்டியலை வாசித்து முடித்தவர், " அரசியல் சட்டத்தில் ஒரு தொகுதிக்கு இரண்டு, மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படலாம். என்றிருந்தால், எனது தம்பிகள் எல்லோரையும் சட்டமன்ற உறுப்பினர்களாக்கி நான் அழகு பார்ப்பேன். என்ன செய்வது? அரசியல் சட்டம் அதை அனுமதிக்கவில்லை. இருந்தாலும் ஒரு பெண்ணிடம் பத்து பட்டுப்புடவைகள் இருந்தால், ஒரு நிகழ்ச்சிக்கு செல்லும் அவள் ஒரு பட்டுப்புடவை தான் கட்டிச் செல்லவாள். அதற்காக அலமாரியில் உள்ள மற்றப் புடவைகள் மட்டமானவை என்று அர்த்தமல்ல. இந்த நிகழ்ச்சிக்கு இந்தப் புடவை, பிரிதொரு நிகழ்ச்சிக்கு வேறொரு புடவை என்றே கொள்ளவேண்டும்என்றுகுறிப்பிட்டுகூட்டத்தைதிருப்திகரமாக முடித்தனுப்பினார்.

அன்று செய்தி ஊடகங்கள் அதிகமில்லை. ஆகாஸ்வாணியும், ஆல் இந்தியா ரேடியோவும், எங்கோ பணக்கார பண்ணையார் வீடுகளில் தூர்தர்ஷனும் ஒரு நாளைக்கு ரெண்டு முறை 10 நிமிடங்கள் செய்தி சொல்லும்.

முரசொலி, தினத்தந்தி, தினகரன் கூட மறுநாள் தான் செய்திகளைத் தாங்கி வரும்.

ஆனால் விஞ்ஞான வளர்ச்சி, விஸ்வரூபம் எடுத்துவிட்ட இன்றைய நாளில் எல்லாம் மக்களின் விரல்நுணிக்கு வந்து விட்டது. ஆனாலும் நமது தலைவர் திராவிடப் பேரரசர் தளபதியவர்கள் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் பழைய முறையிலேயே பக்கத்தில் பொதுச்செயலாளர், பொருளாளர், முதன்மைச் செயலாளர், அமைப்புச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் சூழ நேர்காணலை நடத்திவருகிறார்.

தி.மு.கழகத்தின் பலம் பெருகிவரும் இந்நாளில் இன்னும் இன்னும் புதியவர்கள் தாய்க்கழகத்தில் தங்களை இணைத்துக் கொள்கின்றனர். இது அறிவாலயத்தில் தினசரி வாடிக்கை நிகழ்ச்சியாகிப் போனது.

**கடந்த ஐந்தாண்டில் சிறப்பான மக்கள் நல ஆட்சி தந்து, அனைத்து மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்த திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள் வாய்மையுரு தமிழினத்தின் முன், நன்றி மறவா தமிழர்களின் முன் நிற்கிறார் தனது ஆட்சியின் சாதனைப் பட்டியலை சுமந்தபடி.**

**ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது ஒரு ரூபத்தில் அவரது ஆட்சியின் சாதனையின் பலன் இருந்தே தீரும்.**

**தொட்டில் முதல் சுடுகாடு வரை அவரின் நல்லாட்சியின் பலனை எல்லோரும் அடைந்தே வருகின்றோம்.**

**தமிழ்நாடு எங்கும் தலைவர் தளபதியவர்கள் நீக்கமற நிறைந்து நிற்கிறார்.**

இனி நமக்குள்ள பணி என்னவென்றால், எல்லா தொகுதியிலும் தலைவர் தான் வேட்பாளர்!

ஸ்டாலின் தொடரட்டும்!

தமிழ்நாடு வெல்லட்டும்! என்றே நெஞ்சில் பதித்திடுவோம்!

தலைவர் கலைஞர் தான் அடிக்கடி சொல்லுவார்;

மனமாச்சர்யங்கள் அணுவளவு இருந்தாலும் அதனை மறந்து பணியாற்று! ஒன்று சேர்ந்து பணியாற்றினால், உன்னை வீழ்த்திட எந்த சக்தியாலும் முடியாது! " என்று.

என்ன?

தலைவரின் கணிப்பை, இன்னும் இன்னும் தொடர்ந்து நிறைவேற்றுவோமா!

**வாழ்க தலைவர் தளபதியவர்கள்!**
**வெல்க இந்தியா கூட்டணி!**



மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் தொகுதிக் கழக செயல்வீரர்கள் கூட்டம் மேலூரில் நடைபெற்றதில் தேர்தல் பணி குறித்து மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், கரு தியாகராஜன், ஆனந்த், முகமது யாசின், பொன்னடியான், குமரன், ராஜராஜன், குமரேசன், ரிஷி, பிரபு, கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சியினர், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

### சிங்கம்புணரி — தேவகோட்டை — இளையான்குடியில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ தேர்தல் பரப்புரைக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமை! முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரை!

*சிவகங்கை, மார்ச் 24-* முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தமிழ்நாடு தலை குனியாது என்ற பரப்புரை பொதுக்கூட்டத்தில் மாவட்ட வாரியாக சுற்றுப் பயணம் செய்து பேசி வருகிறார். இதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்டத்தில் நேற்று முன்தினம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சிங்கம் புணரி, காரைக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை, மானாமதுரை, சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இளையான்குடி ஆகிய ஊர்களில் தமிழ்நாடு தலைகுனியாது என்ற பரப்புரை பொதுக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

இந்த பொதுக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக செயலாளர், கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமை வகித்தார். இந்த மூன்று ஊர்களில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் அமைச்சர் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி.க்கள் கோபாலகிருஷ்ணன், ஓ.பி.எஸ். ரவீந்திரநாத், முன்னாள் எம்.எல்.ஏ . ஐயப்பன்மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, கல்லல் அசோகன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். சட்டமன்றத் தொகுதி வாரியாக கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்.

சிங்கம்புணரி ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூமணி, கே.பாலசுப்பிரமணியன், எஸ்.சண்முகவடிவேல், விராமதி மாணிக்கம், குன்னக்குடி சுப்பிரமணியன், பி.செல்வராஜ், நா.நெடுஞ்செழி யன், சுப. சின்னத்துரை, பேரூர் கழக செயலாளர்கள் கதிர்வேல், கே.பி.எஸ்.பழனியப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து, எம். சோமசுந்தரம். பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. என்.ரவி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம். சாக்ளா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன்,


மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி.கோகிலா ராணி நாராயணன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் எஸ்.முத்துக்குமார், சிவபுரி சேகர், நிர்வாகிகள் சிவக்குமார், மனோகரன், பாஸ்கரன், குடோன்மணி, புகழேந்தி, அலாவுதீன் யாகூப், உதயம் சண்முகம், சோமசுந்தரம், பொருளாளர் ஏ. எம்.கண்ணன், இளைஞரணி வைகை மாறன், பசீர், மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தேவகோட்டை நகர் கழகச் செயலாளர் பெரி. பாலா, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் நாகனிரவி, வே.பூபால சிங்கம், லெ.மு. ரவிச்சந்திரன், சுப.சின்னதுரை, பொதுக்குழு உறுப்பினர் மதார்சேட், நிர்வாகிகள் அன்புச் செல்வன், இளங்கோ, கருணாநிதி, சொர்ணலிங்கம், இளைஞரணி அரவிந்த், சாகீர்உசேன், வர்த்தக அணி சரவணன், பேரூர் கழகச் செயலாளர்கள் பகுருதீன் அலிமுகமது, அசோக், ராசு, பிரம்மையா உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

இளையான்குடி முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், மானாமதுரை நகர் கழகச் செயலாளர் க. பொன்னுச்சாமி, ஒன்றியச் செயலாளர்கள் வே.தமிழ்மாறன், கா.வெங்கட்ராமன், ஆறு . செல்வராஜன், மா.அண்ணாதுரை, துரை ராஜாமணி, அ.முத்துச்சாமி, திருமதி வசந்தி சேங்கை மாறன், எம்.ஏ. கடம்பசாமி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இபுராகீம், பேரூர் கழக செயலாளர்கள் பி.ஏ. நஜ்மூதீன், நாகூர் கனி, நிர்வாகிகள் சுப.தமிழரசன், தகவல் தொழில்நுட்ப அணி சுப. அன்பரசன், கண்ணன், வே.கருணாகரன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் எம்.முருகானந்தம், மலை மேகு, அய்யாச் சாமி, அண்ணாமலை, ஈஸ்வரன், ரவிச்சந்திரன், பாஸ்கரன், மூர்த்தி, மானாமதுரை நகர் மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர், கார்த்தி உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ்.பி.சேசுராசன்**
**மார்ச் 24 (2022)**



**தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக கொரடாச்சேரி ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும் – இரண்டு முறை ஒன்றியக்குழு துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**